அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்:300/2015

தேதி : 21.12.2015

# 1980ம் ஆண்டு விலையில் கச்சா எண்ணெய் விலை வீழ்ச்சியை மக்களுக்கு கிடைக்கச் செய்ய... பெட்ரோல் டீசல் விலையை பாதியாக குறைக்க வேண்டும் சமக தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அறிக்கை

இந்தியாவில் பெட்ரோல் / டீசல், சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலைகளை, உலகச் சந்தையில் கச்சா எண்ணெய் விலைகளையொட்டி நிர்ணயம் செய்யும் வழக்கம் இருந்து வருகிறது. மூன்றாண்டுகளுக்கு முன் இவற்றின் விலை நிர்ணயத்தை எண்ணெய் நிறுவனங்களே மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்ட பிறகு விலைகளின் ஏற்ற இறக்கம் மாதத்தில் இருமுறை என மாற்றியமைக்கப்பட்டு வருகிறது.

அப்படி மாற்றியமைக்கும் போது உலகச் சந்தையில் கச்சா எண்ணெய் விலைகளின் அடிப்படையிலும், டாலரின் ரூபாய் மதிப்பு அடிப்படையிலும் இந்தியாவில் விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. ஆனால் விலை நிர்ணய மேலாண்மையில் மிகப்பெரும் குறை என்னவென்றால், கச்சா எண்ணெய் விலை உயர்வுக்கு ஏற்றபடி பெட்ரோல்/ டீசல் விலைகள் உயர்த்தப்படும் அளவு, கச்சா எண்ணெய் விலை குறையும் போது அதற்கேற்ப சரியான விகிதத்தில் குறைப்பதில்லை என்பதுதான். எண்ணெய் நிறுவனங்களின் வருமானத்தையும், அவை நஷ்டப்படக்கூடாது என்பதையும் மட்டுமே மனதில் கொண்டு மத்திய அரசு பெட்ரோலியப் பொருள்களின் விலை நிர்ணயத்தை அனுமதித்துக் கொண்டிருப்பது பொதுமக்களுக்கு இழைக்கும் மிகப்பெரும் அநீதி.

தற்போது உலகச் சந்தையில் கச்சா எண்ணெய் பேரல் ஒன்றுக்கு 35 டாலருக்கும் குறைவாக உள்ளது. பெட்ரோல் / டீசல் போன்றவைக்கு கடந்த சில முறை அறிவிக்கப்பட்டுள்ள விலை குறைப்புகளில் சில காசுகளே குறைக்கப்பட்டுள்ளது. தற்போதைய ஒரு செய்தியின் படி 40 ஆண்டுகளுக்கு பிறகு அமெரிக்கா முதன் முறையாக கச்சா எண்ணெய் ஏற்றுமதியில் இறங்க இருப்பதாகவும், அதையடுத்து அடுத்த ஆண்டு துவக்கத்திலேயே கச்சா எண்ணெய் 30 டாலருக்கும் குறைவாக விற்கப்படும் சூழ்நிலை உருவாகும் என பொருளாதார நிபுணர்கள் கணித்துள்ளதாகவும் தகவல்கள் வந்துள்ளன.

80 களின் துவக்கத்தில் கச்சா எண்ணெயின் விலை 35 டாலர் அளவு இருந்தது. 2008 இல் அதிகபட்சமாக 147 டாலர் அளவு உயர்ந்து 2013 முதல் 100 டாலரிலிருந்து குறையத் தொடங்கி தற்சமயம் 35 டாலர் அளவுக்கு குறைந்துள்ளது.

உற்பத்திச் செலவு, போக்குவரத்துச் செலவு, பணவீக்கம், டாலருக்கு எதிரான ரூபாயின் மதிப்பு போன்றவற்றை கருத்தில் கொண்டு பார்க்கும் போது 80 களின் போது பெட்ரோல் / டீசல் என்ன விலைக்கு விற்கப்பட்டதோ அதை விட சற்று கூடுதலான விலைக்கு தற்போது விற்பதே நியாயமானதாக இருக்கும். ஆனால் பெட்ரோலியம் பொருள்கள் தற்போது ஏறக்குறைய பல மடங்கு விலை உயர்த்தி விற்கப்படுவது நியாயமற்ற செயல்..

கச்சா எண்ணெய் விலை உயரும் போது மக்கள் மீது அந்தச் சுமையை ஏற்றத் தெரிந்த மத்திய அரசுக்கு, கச்சா எண்ணெய் வெகுவாகக் குறைந்து வரும் போது அதன் பலனை மக்களுக்கு பகிர்ந்தளிக்காதது மத்திய அரசு மக்களை ஏமாற்றும் செயல் ஆகும்.

எனவே கச்சா எண்ணெய் விலை உலக அளவில் அதிகபட்சமாக குறைந்துள்ள நிலையில் பெட்ரோல், டீசல் விலைகளை தற்போதைய விலையில் பாதி அளவுக்கு விற்பதே நியாயமானதாக இருக்கும்.

இதன்மூலம் பொதுமக்கள், வியாபாரிகள், உற்பத்தியாளர்கள் என அனைவரும் பயன்பெறும் சூழ்நிலை உருவாகும். எனவே பெட்ரோல் / டீசல் / சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலைகளை மிகக் கணிசமான அளவு குறைக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்.

கச்சா எண்ணெய் விலை கடுமையாக குறைந்துள்ள நிலையில் இதைப் பயன்படுத்தி மத்திய அரசு எண்ணெய் நிறுவனங்களுக்கு கலால் வரியை உயர்த்தியிருப்பது மேலும் வியப்பும் அதிர்ச்சியும் அளிப்பதாக உள்ளது. கலால் வரியை உயர்த்தியிருப்பதன் மூலம் எண்ணெய் நிறுவனங்கள் சில்லறை விற்பனையில் விலைகளைக் குறைக்க இயலாத சூழ்நிலையை உருவாக்கிவிடும். எனவே மத்திய அரசு சமீபத்தில் அறிவித்திருக்கும் கலால் வரி உயர்வையும் திரும்பப் பெற வேண்டும் என்பதையும் சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் வலியுறுத்த விரும்புகிறேன்.

நன்றி, வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்